**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.95/2022**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.8** |
| **Name** | **:** | திரு. லோகநாதன் |
| **Husband's Name** | **:** | சாமிநாதன் |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

எதிரி ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 8.11.2023.**

முதல் விசாரணை -

நான் விளை கிராமத்தில் வசிக்கிறேன். தறி வேலை செய்து வருகிறேன். புருஷோத்தமனை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். புருஷோத்தமன் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்யவில்லை. நான் காய்கறி வாங்க 20.10.2021 அன்று சுமார் காலை 11 மணிக்கு சென்றுக்கொண்டு இருந்தபோது போலிசார் வந்தார்.

அவர்கள் ஆஜர் எதிரி வீட்டில் போய் உட்கார்ந்தார்கள். என்னவென்று

கேட்டபோது அண்ணன் தம்பிக்குள் பிரச்சனையில் ஒருவர் அடுக்கம்பாறை மருத்துவமனையில் இருப்பதாக தெரிவித்தார்கள். அப்போது அவர் ஒரு படம் வரைந்தார். அந்த படம் வரைந்தது சம்பந்தமாக என்னிடம் கையொப்பம் போட சொன்னார். நான் போட்டேன். சாட்சிக்கு வரவேண்டும் என்று சொன்னார். சரி என்று சொன்னேன். என்னுடன் வீரமணி என்பவரும் கையொப்பம் போட்டார்.

பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். <u>பார்வை மகசர் அ.சா.ஆ.2</u>. அதன்பிறகு போலிசார் என்ன விசாரணை மேற்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். இரண்டாவது கையொப்பம் வீரமணியுடையது. <u>கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.3</u>.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு பகுதிக்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை பகுதி குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு பகுதி குறுக்கு விசாரணை</u>

20.10.2021 அன்று 13.30 மணிக்கு போலிசார் படம் வரைந்தபிறகு புருஷோத்தமன் வீட்டு மொட்டை மாடிக்கு சென்று எரிந்த நிலையில் உள்ள கோரைப்பாய் பெட்ஷிட் தலையணை ஆகியவற்றில் இருந்து சிறிது என் முன்னிலையிலும், வீரமணி முன்னிலையிலும் கைப்பற்றினார்கள் என்றாலும், அதற்கு நாங்கள் கையொப்பம் போட்டோம் என்றால் நான் பார்க்கவில்லை.

கைப்பற்றப்பட்ட பொருட்களை பார்த்தால் அடையாளம் தெரியுமா என்றால் கைப்பற்றப்பட்ட பொருட்களை பார்க்காததால் அடையாளம் சொல்ல

முடியாது. காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

காலை 11 மணி இருக்குமா என்றால் இருக்கும். நான் போவதற்கு முன்பே அங்கு போலிசார் நிறைய பேர் இருந்தார்கள் என்றால் கூட்டமாக இருந்ததால் தான் சென்றேன். நான் போகும்போதே தலைவர் தணிகாசலம் உடன் வந்தார் என்றால் அவரும் வந்தார். நாங்கள் இருவரும் ஒன்றாக இருந்தபோது நிறைய கையொப்பங்கள் பெறப்பட்டது என்றால் படத்திற்காக ஒரு கையொப்பம் பெறப்பட்டது.

அந்த இடத்தில் நான் ஒரு கையொப்பம் தான் போட்டேன் என்றால் சரி தான். தணிகாசலமும் ஒரு கையொப்பம் போட்டார் என்றால் நான் கவனிக்கவில்லை. விசாரணை ஒரு அரைமணி நேரம் நடந்திருக்குமா என்றால் நடந்திருக்கும். நான் வீட்டிற்கு சுமாராக 11.30, 12.00 மணிக்கு சென்றுவிட்டேன். நான் ஒரு கையொப்பம் போட்டுள்ள நிலையில் மற்ற கையொப்பங்கள் எங்கு எதற்காக போடப்பட்டது என்று எனக்கு தெரியவில்லை என்றால் சரி தான்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.

Additional Sessions Judge,

Arani.